**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்**

**முன்னிலை - செல்வி.சே.தா.ஆய்ஷா பேகம், பி.ஏ., பி.எல்,**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.

2024 -ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ம் நாள் வியாழக்கிழமை

அசல் வழக்கு எண்.25/2015

**OST/0300025/2015**

(மைனர்) பிரவீன் குமார், த/பெ. திரு.ரவி.
(வாதி மைனர் ஆதலால் அவரது தாயாரும், கார்டியனும்,
சவரட்சணைக்கர்த்தாவுமான திருமதி. ராதா, த/பெ. திரு.பெருமாள்சாமி
என்பவரால் எடுத்துரைக்கப்படுகிறார்)

... வாதி

/எதிர்/

திரு. ரவி, த/பெ. திரு.ஆறுமுகம்.

...பிரதிவாதி

இவ்வழக்கு என்முன்பாக 25.04.2024 தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஜி.நெடுஞ்செழியன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஜி.குணசேகரன் அவர்கள் முன்னிலையாகியும், வாதியை அழைத்து ஆஜரியின்மையால், இதுகுறித்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

வாதி, பிரதிவாதிக்கு பிறந்த மகன் என விளம்புகை செய்து தக்க உத்திரவு பிறப்பிக்க கோரியும், தாவா செலவுகளை வாதிக்கு பிரதிவாதி கட்டிக்கொடுக்கவும் மற்றும் இதர பரிகாரங்களுக்காகவும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) பிரதிவாதி ஆஜர். பிரதிவாதியின் வழக்கறிஞர் ஆஜர். வாதியை அழைத்தும் வருகையில்லை. வாதியின் வழக்கறிஞர் ஆஜர். வழக்கு மீண்டும் 2வது முறையாக 1.10 மணிக்கு அழைக்கப்பட்டபோது வாதி ஆஜரில்லை. எவ்வித பிரதிநிதித்துவமும்

இல்லை. நீதியின் நலன் கருதி வழக்கு உணவு இடைவேளைக்காக ஒத்தி வைக்கப்பட்டு மீண்டும் உணவு இடைவேளைக்கு பிறகு 2.45 மணிக்கு அழைக்கப்பட்டபோது வாதி ஆஜரில்லை. வாதி தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லை. வழக்கு மீண்டும் 2வது முறையாக உணவு இடைவேளைக்கு பிறகு 4.00 மணிக்கு அழைக்கப்பட்டபோது வாதி ஆஜரில்லை. வாதி தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லை. இந்த வழக்கு நீண்ட காலமாக நிலுவையில் இருந்து வருகிறது. வாதிக்கு இந்நீதிமன்றத்தால் வழக்கை மேல் நடத்த போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டும், வாதி எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. வாதி அழைத்தும் ஆஜரில்லை. இது வாதிக்கு வழக்கை நடத்த விருப்பமில்லை என்பதை காட்டுகிறது. எனவே, வாதியை அழைத்தும் வருகையின்மையால் இவ்வழக்கு செய்யத்தக்க செய்யாமைக்காக தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

2024-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தின் அவையறிய பகரப்பட்டது.

(ஓம்) சே.தா.ஆய்ஷா பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.